கூட்ட எண் 09 நகராட்சி அலுவலகம்,

2020 - 2021 -ம் ஆண்டு ஆரணி,

நாள் 29.10.2020

2020-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 29.10.2020-ந் தேதி வியாழக் கிழமை மாலை 4.00 மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

பொருள்கள்

1. இந்நகராட்சி ஆணையர் அவர்களின் அக்டோபர் 2020 ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

2. இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் அக்டோபர் 2020 ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

3. ஆரணி நகராட்சியில் வார்டு 11 ல் அருணகிரி சத்திரம் சத்தியமூர்த்தி சாலை பாட்சா தெரு சந்திப்பில் உள்ள சிறுபாலம் பழுதடைந்து உள்ளதால், இதன் மேற்புறம் உள்ள சிமெண்ட் பலகை பழுதடைந்து உள்ளதால் புதியதாக சிறுபாலம் Slab மற்றும் Side Wash அமைத்து தர தோராய மதிப்பீடு ரூ. 30,000/- ஐ பொது நிதியில் இருந்து வேலைகள் செய்ய இந் நகர மன்றத்தின் அனுமதி வேண்டபடுகிறது.
அலுவலக குறிப்பு:மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண் :766/2020/இ1)

4. ஆரணி நகராட்சியில் காந்தி ரோடு மற்றும் சத்தியமமூர்த்தி சாலை வாழப்பந்தல் ரோட்டில் உள்ள காந்தி சிலைக்கு கதவு ரிப்பேர் மற்றும் பெயிண்ட் அடித்தல், சுற்று சுவர் வர்ணம் பூசுதல் பணிகளுக்கு வேலைகள் செய்து தர தோராய மதிப்பீடு ரூ.30,000/- ஐ இந் நகர மன்றத்தின் அனுமதி வேண்டபடுகிறது.
அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண் :766/2020/இ1)

5. ஆரணி நகராட்சியில் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்கு தேவையான மின்உபகரணங்கள் வரும் மார்ச் 2021 வரை ஆறு மாத காலத்திற்கு வாங்கி, நகராட்சி கையிருப்பு வைத்து பயன்படுத்தி கொள்ள ஆகும் தோராயமாக செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண் :766/2020/இ1)

6. ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட த/பெ.முருகன் என்பவர் கதவு எண்.40,கோட்டை வடக்கு தெரு என்னுமிடத்தில் எவ்வித அனுமதியும் இல்லாமல் Airtel Cell Phone Tower அமைத்து வருவதாகவும் அப்பணி தடுத்து நிறுத்துமாறு திருமதி.வெ. பிரியா க/பெ. வெங்கடேசன் என்பவரும் மற்றும் பொது மக்களும் புகார் அளித்துள்ளனர்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை G.O.M.S.No:177, நாள்:17.12.2002-ன் அடிப்படையில் Criminal Original Petition Crl.O.P.No.11160 of 2020, நாள்: 27.07.2020 -ல் காவல் துறை பாதுகாப்பு வழங்க நீதிமன்ற உத்தரவு பெறப்பட்டுள்ளது.

எனவே, மேல் நடவடிக்கைக்காக சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் திரு.V ஜெயபிரகாஷ் நாராயணன் அவர்களிடம் வழக்கு ஒப்படைக்கப்பட்டது.

வழக்கறிஞர் திரு.V. ஜெயபிரகாஷ் நாராயணன் அவர்கள், வழக்கறிஞர் கட்டணமாக ரூ.20,000/- (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) வழங்க கோரியுள்ளார்.

எனவே, வழக்கறிஞர் கட்டணம் வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.மேலும், அவசர அவசியம் கருதி முன் அனுமதி வழங்கவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.2.அவசர, அவசியம் கருதி முன் அனுமதி வழங்கலாம்.3.நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும்.மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண்.1184 /2020/எப்1)

7. ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் Sintax Tank மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.ஆழ்துளை கிணற்றில் உள்ள 1 Hp மோட்டார்கள் பழுது சரி செய்ய இயலாத நிலை உள்ளதால், புதியதாக மின் மோட்டார் மற்றும் உதிரி பாகங்கள் வாங்க மதிப்பீடு தொகை ரூ.2.80 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.2. ,மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண் :766/2020/இ1)

**8.** ஆரணி நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டு திட்ட நிதி (IUDM) 2020-2021ன் கீழ் ஆரணி நகராட்சிக்குட்பட்ட சாலைகளை மேம்படுத்தும் பணிக்காக 3 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் 15.10.2020 அன்று பெறப்பட்டு தொழில் நுட்ப தகுதி குறித்த விவரம் அடங்கிய உறை பிரிக்கப்பட்டு தொழில் நுட்ப கூர்ந்தாய்வு மதிப்பீட்டு குழுவின் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு, குழுவின் பரிந்துரையின் பேரில் 21.10.2020 அன்று கீழ்கண்ட பணிகளுக்கான விலை விகிதம் அடங்கிய உறையினை பிரிக்கப்பட்டது.ஒப்பந்ததாரர்கள் அளித்துள்ள விலை விகிதம் குறித்து ஒப்பு நோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | ஒப்பந்ததாரர் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு 1 – புதுக்காமூர் சாலை )DRS நகர் தெரு (, வார்டு -9 இந்திராநகர் 1(ம (2வது குறுக்கு தெரு, குமரன் நகர் மெயின் தெரு குறுக்கு 1,2,3,4 ஜீவா நகர் மெயின் தெரு, மத்திய தெரு , குறுக்கு தெரு 1 (ம (2 , வார்டு 23, முள்ளிப்பட்டு ரோடு .ஆர்.ஜி.எம் ) தெரு ( நகர்1,2 வார்டு 27 ஆகிய தெருக்களில் தார்சாலை அமைக்கும் பணிகள் மற்றும் வார்டு -1 ல் புதுக்காமூர் மெயின் தெரு விரிவு , குறுக்கு தெரு 1 ,2 – வார்டு -26 ( சரஸ்வதி நகர் முதல் தெரு குறுக்கு தெரு 1,2 , வார்டு -26 நேரு நகர் .பி.ஈ ) குறுக்கு தெரு ( பின்புறம்1,2,3,4, வார்டு 27 ல் அண்ணாநகர் மெயின் விரிவு குறுக்கு தெரு 1,2 (ம ( வார்டு28 ல் சைதை பள்ளிக்கூடத் தெரு விரிவு குறுக்கு தெரு 1,2 – பேவர் ப்ளாக் அமைக்கும் பணிகள் | 119.60 | M/s பத்ரா கன்ஸ்ட்ரக்ஷன், சென்னை - 101<br>M/ Sஇஇளங்கோவன். சைதாபேட்டை ஆரணி, | (+) 4.98%அதிகம்<br>(+) 7.88%அதிகம் |
| 2 | வார்டு 30 - ல் மீனாட்சி நகர் மெயின் தெரு,ராஜேஸ்வரி நகர் முதல் மற்றும் இரண்டாவது தெரு, குறுக்கு தெரு 1 மற்றும் 2,முருகா நகர், அம்மா நகர் மெயின் தெரு, குறுக்கு தெரு 1 மற்றும் 2, வார்டு 33 க்கு உட்பட்ட ஸ்ரீ அம்மன் நகர் மெயின் தெரு, குறுக்கு தெரு 1,2 மற்றும் 3 பகுதிகளில் தார் சாலை அமைக்கும் பணிகள் வார்டு.30க்கு உட்பட்ட வி -,ஏகே நகர் நகர் . குறுக்கு தெரு ( அரியாதம்மன்)விரிவு1 மற்றும் 2 மற்றும் வார்டு 33 க்கு உட்பட்ட பள்ளிக்கூட தெரு விரிவு குறுக்கு தெரு 1 மற்றும் 2 பகுதிகளில் பேவர் பிளாக் அமைக்கும் பணிகள். | 94.50 | M/s M. V.மதி, ஆற்காடு<br>M/S R.குமார் , கிளம்பாடி | (+) 4.84%அதிகம்<br>(+) 5.94%அதிகம் |
| 3 | ஆரணி நகராட்சியில் வார்டு 1 - புதுக்காமூர் சாலை )DRS நகர் தெரு (, வார்டு 9- இந்திராநகர் விரிவு முதல் குறுக்கு தெரு , வார்டு 30 - ராஜேஸ்வரி நகர் முதல் தெரு , வார்டு 28 - சைதைப்பேட்டை பள்ளிக்கூடத் தெரு விரிவு குறுக்கு தெரு1,2 மற்றும் 3 - மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகள், வார்டு 1 - புதுக்காமூர் சாலை )DRS நகர் தெரு (, வார்டு -9 இந்திராநகர் விரிவு குறுக்கு தெரு 2 (ம வார்டு (30 ராஜேஸ்வரி நகர் முதல் தெரு சிறுபாலம் அமைக்கும் பணிகள் - | 57.75 | M/இளங்கோவன்.இ S சைதாபேட்டை, ஆரணி<br>M/s பத்ரா கன்ஸ்ட்ரக்ஷன், சென்னை - 101 | (+) 4.90%அதிகம்<br>(+) 5.61%அதிகம் |

அலுவலக குறிப்பு :- மேற்கண்ட பணிகளுக்கு விலைவிகிதம் வழங்கியுள்ள அனைவருமே அந்தந்த பணிக்கான மதிப்பீட்டு தொகையை விட கூடுதலான விழுக்காட்டிற்குத்தான் விலைவிகிதம் அளித்துள்ளனர். இருப்பினும், இத்திட்டம் அரசின் சிறப்பு திட்டமாதலினாலும், விரைந்து முடிக்க வேண்டிய கட்டாயத்தினாலும், முதல் அழைப்பு என்ற போதிலும் சிறப்பினமாக கருதி 3 சிப்பங்களின் பணிக்கான மதிப்பீட்டு தொகைக்கு கூடுதலாக 05% விழுக்காட்டிற்கு குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளியினை ஏற்கவும், பணி ஆணை வழங்கவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண் 338/இ1/2020)

9. ஆரணி நகராட்சிப் பகுதிகளிலுள்ள 33 வார்டுகளில் உள்ள பொதுமக்களில், கால்நடைகள் பராமரிப்போர் / கால்நடை உரிமைதாரர்கள் அனைவரும் தமது கால்நடைகள் குறித்த விவரங்களை ஆரணி நகராட்சி அலுவலகத்தில் 15 நாட்களுக்குள் பதிவு செய்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பதிவுக்கட்டணம் மற்றும் இதர விவரங்களை கால்நடை உரிமைதாரர்கள் நகராட்சி அலுவலகத்தில் நேரில் கேட்டுத் தெரிந்துக்கொள்ளலாம். குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் பதிவு செய்யத் தவறும் கால்நடை உரிமைதாரர்களின் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், கால்நடைகளை உரிய முறையில் பராமரிக்கத் தவறியதற்கான அபராதத் தொகை வசூலிக்கப்படும். தொடர்ச்சியாக விதிமுறைகளை பின்பற்றத் தவறும் கால்நடை உரிமைதாரர்களின் கால்நடைகளை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு எண்கள். 245,246,247 (ம) 313(1), 313(2)ன்படி பறிமுதல் செய்யப்படுவதுடன், அவற்றினை நகராட்சியின் சொத்தினமாகக் கருதி NGO-க்களுக்கு (அரசு சாரா தொண்டு அமைப்புகளுக்கு) பொது ஏலம் விடப்படும் என தெரிவித்து தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும் அதற்காக ஆகும் தோராய செலவின தொகை ரூ. 6552/-க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.
<u>அலுவலக குறிப்பு</u>.1.மன்றம் அனுமதிக்கலாம்.2.அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.( கோப்பு எண். 1298/2019/எச்1)

10. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்பாட்டில் உள்ள வாகனம் எண். TN 25 Y 4635க்கு ஆரணி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் புதுப்பிக்க FC செய்ய வேண்டியும் மேலும் மேற்கண்ட வாகணத்திற்கு வேக கட்டுப்பாட்டு கருவி பொறுத்த வேண்டியும் அதற்கான ஆகும் தோராய செலவினம் தொகை ரூ. 14000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
<u>அலுவலக குறிப்பு</u>.1. மன்றம் அனுமதி அளிக்கலாம். 2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.( கோப்பு எண். 1470/2020/எச்1 )

11. ஆரணி நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் கட்டி சுமார் 20 ஆண்டுகளுக்கு மேல் கடந்து உள்ளது. இந்த பேருந்து நிலையத்தில் உள்ள தூண்கள் பழுதடைந்து உள்ளது. இந்த இடத்தில் உள்ள தூண்களை பழுது சரி செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.1.00 இலட்சம் ஆகும். இப்பணி அவசியம் கருதி, நகர மன்றத்தின் அனுமதிக்கு வேண்டபடுகிறது.
அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண் :766/2020/இ1)

12. இந் நகராட்சியின் 2019-2020 ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கை தயார் செய்ய இரு நிறுவனங்களிடமிருந்து கீழ்கண்டவாறு விலைப் பட்டியல் வரப் பெற்றுள்ளது. 1. Cursor Solution, Adyar, Chennai - 20, விலைப் பட்டியல் - 50500 - 15500 2. G. Soft System, Ekattuthangal, Chennai - 32. விலைப் பட்டியல் ரூ.50,000/- (ம) 15,000/- வரப் பெற்றுள்ளது. இரு நிறுவனங்களை ஒப்பிட்டு நோக்கும் போது குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள G.Soft System, Ekattuthangal, Chennai - 32 என்கிற நிறுவனத்திடம் தணிக்கை கணக்குகள் (ம) அச்சிடும் பணி மேற்கொண்டமைக்கு ரூ. 50,000/- (ம) 15,000/- ஆக மொத்தம் ரூ.65, 000/-(அறுபத்து ஐந்தாயிரம் மட்டும்) வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு:-மன்றம் குறைந்த விளைப்புள்ளியினை அங்கீகரித்து தொகை வழங்கலாம்.(ந.க.எண். 792/பி1/2019)

13. ஆரணி நகரட்சிக்கு சொந்தமான கமண்டல நகாநதி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள ஜெனரேட்டர் தற்காலிகமாக பழுது ஏற்பட்டு, டீசல் மற்றும் பெட்ரோல் டேங்க்,ஆயில் பில்டர்,Air பில்டர் மற்றும் சர்வீஸ் செய்ய , தனியாரிடம் விலைப்புள்ளி கோரியதில் பழுது பார்க்க ரூ. 71,184/- மற்றும் இதர சாமான்கள் மாற்றி தர ரூ.28,816/- ஆக மொத்தம் ரூ.1.00 இலட்சம் செலவு ஆகும். இனி வரும் காலங்கள் வடகிழக்கு பருவ மழை காலம் மற்றும் குடிநீர் பணிகள் அவசியம், அவசரம் கருதி, மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.2. ,மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண் :766/2020/இ1)